வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 06
20.09.2025 சனிக்கிழமை
இதழ் : 263
பக்கங்கள் : 08




# அறிவியல் மாற்றத்தை ஏற்காவிடின் பொருளாதாரத்தில் பின்தங்குவோம்

## ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க



கொழும்பு, செப்ரெம்பர் 20

**“தொழில்நுட்பம் - அறிவியல் முன்னேற்றங்களை ஏற்றுக்கொள்ள நாம் தவறினால் உலக பொருளாதாரத்தில் நாம் பின்தங்கியிருக்கும் அபாயம் உள்ளது”, என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டுமாயின், அனைத்துத் துறைகளிலும் செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். தற்போதைய அரசாங்கத்தின் டிஜிற்றல் மயமாக்கல் திட்டம் இலங்கையை பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் புதிய நிலைக்கு உயர்த்தும் ஒரு திட்டம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மத்திய நிலையத்தை நேற்று திறந்து வைத்து உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், தேசிய சைபர் பாதுகாப்பு செயல்பாட்டு மத்திய நிலையத்தின் மூலம் குடிவரவு - மற்றும் குடியகல்வு திணைக்களம், போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உள்ளிட்ட முக்கியமான டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகளை பேணும் 37 நிறுவனங்களை 24 மணி நேரமும் கண்காணித்து, அவற்றுக்கு

07

# திலீபன் ஆவண காட்சியகம் நல்லூரில் இன்று திறப்பு!

யாழ்ப்பாணம், செப். 20

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை விளக்கும் ஆவணக் காட்சியகம் இன்று சனிக்கிழமை நல்லூரில் திறந்து வைக்கப்படவுள்ளது.

“பார்த்தீபன் திலீபனாக... திலீபன் தியாக தீபமாக...” என்னும் தொனிப்பொருளுடன் திலீபன் நினைவாலய முன்றலில் இன்று மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள், முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

வழக்கமாக ஒவ்வொரு வருடமும் நடைபெறும் இந்த ஆவணக் காட்சியகம் அமைக்கப்படும்

07



# ஜனாதிபதி செயலகம் முன்பு மன்னார் மக்கள் போராட்டம்

கொழும்பு, செப். 20

காற்றாலை மின்சார திட்டம், கனிம மணல் அகழ்வு என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகம் முன்பாக மன்னார் மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“நமது நாடு - நமது மன்னார் - நமது போராட்டத்தின் கோரிக்கைகள்” என்ற கருப்பொருளின் கீழ் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மன்னார் தீவில் முன்னெடுக்கப்படும் 14 காற்றாலை மின்சார கோபுரங்கள்

07

# திலீபன் திருவுருவப்படத்தை அகற்றியது திருமலை பொலிஸ்

திருகோணமலை, செப். 20

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தலை குழப்பும் விதமாக திருகோணமலையில் நினைவேந்தல் நடக்கும் இடத்திலிருந்து திலீபனின் உருவப்படம் அகற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

திருகோணமலை சிவன் கோயிலடியில் தியாகதீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் கடந்த 5 நாட்களாக நினைவேந்தப்பட்டது. தினமும் 5.15 மணிக்கு அந்த இடத்தில் நினைவேந்தல்

07

# கோட்டாபய, மகிந்த நேற்று சந்தித்தனர்

கொழும்பு, செப். 20

முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ தனது மூத்த சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷவை நேற்று சந்தித்துள்ளார்.

தங்காலை கார்ல்டன் இல்லத்துக்கு தனது மனைவியுடன் சென்ற கோட்டாபய ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷவுடன் நீண்ட நேரம் உரையாடினார்.

07

# ஓ.எல். பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, செப். 20

2025 க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் 9ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும், பாடசாலை விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் மூலமாகவும் தனிப்பட்ட

07

*2026 வரவு - செலவு திட்டம்*

# 21,610 கோடி ரூபாயால் செலவினம் அதிகரிப்பு

- பாதுகாப்பு அமைச்சுக்கே அதிக ஒதுக்கீடு
- பௌத்த திணைக்களத்துக்கு 135 கோடி ரூபாய்

கொழும்பு, செப். 20

2026ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் அரச செலவினம் நடப்பு ஆண்டையும் விட 21 ஆயிரத்து 610 கோடி ரூபாயால் அதிகரித்துள்ளது.

2026 ஆம் ஆண்டின் மொத்த அரச செலவினம் 4 இலட்சத்து 43 ஆயிரத்து 435 கோடியே 64 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயாகும். இது, நடப்பு ஆண்டில் 4 இலட்சத்து 21 ஆயிரத்து 824 கோடியே 80 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாயாக உள்ளது.

07

# வேலணை ஒருங்கிணைப்பு கூட்டம் மறியல், வாக்குவாதத்துடன் நடந்தது

பு.கஜிந்தன், த.பிரதீபன்

யாழ்ப்பாணம், செப். 20

வேலணை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மறியல் போராட்டம், தொடர் வாக்குவாதங்களுடன் நேற்று நடைபெற்றது.

வேலணை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் பாராளுமன்ற உறுப்பினரும் இணைத்தலைவருமான ஜெ. ரஜீவன் தலைமையில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இணைத்தலைவர் ரஜீவன் எம். பி. முற்பகல் 10 மணிக்கு கூட்டத்துக்கு சமுகமளித்தார். இதன்போது, வேலணை பிரதேச சபை உறுப்பினர்கள் அவரை வளாகத்துக்குள் நுழையவிடாது வழிமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கூட்டத்துக்கு வந்த தம்மை அனுமதிக்கவில்லை என்று கூறியே அவர்கள் இந்த மறியல் போராட்டத்தை

07

# ஹெரோயின் விற்றவர் குருநகரில் நேற்று கைது

த. பிரதீபன், பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம், செப். 20

ஹெரோயின் போதைப்பொருள் வர்த்தகத்தில் நீண்ட நாட்கள் ஈடுபட்ட சந்தேகநபரை தாம் கைது செய் துள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநகர் ஐந்து மாடி பகுதியில் வைத்தே 22 வயதான சந்தேகநபர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். இதன்போது அவரிடமிருந்து 2 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின்

07

# காற்று மாசுபாட்டை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## யாழ். மாநகர சபைக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, செப். 20

யாழ்ப்பாணத்தில் காற்று மாசுபாட்டை குறைக்க அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் யாழ். மாநகர சபைக்கு உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சுற்றுச்சூழலில் வெளியிடப்படும் குப்பைகள், இரசாயன கழிவுகளால் காற்று மாசுபாடு ஏற்படுகிறது. இதைத் தடுக்க யாழ். மாநகர சபைக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி மருத்துவர் உமாசுகி நடராஜாவால் தாக்கல்

07

# பூசை செய்ய சென்ற இளைஞர் திடீர் உயிரிழப்பு

பு. கஜிந்தன்

யாழ்ப்பாணம்,செப். 20

ஆலயத்தில் பூசை செய்யச் சென்ற இளைஞர் ஒருவர் திடீரென உயிரிழந்தார்.

சுதுமலை தெற்கு - மானிப்பாயில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வணிக துறைமுகமாக காங்கேசனை அரசால் அபிவிருத்தி செய்யமுடியாது!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க திட்டவட்டம்

யாழ்ப்பாணம், செப். 20

காங்கேசன்துறை துறைமுகத்தை வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்யமாட்டோம் எனத் தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இந்தியா ஒதுக்கிய பணமும் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு போதாது என கூறினார்.

நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற போக்குவரத்து துறைமுகங்கள் தொடர்பான மாவட்ட அபிவிருத்தி கலந்துரையாடலின்போது பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதில் வழங்கியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் காங்கேசன் துறைமுத்தின் அபிவிருத்திகள் துரிதப்படுத்தப்படுவதோடு யாழ். பலாலி விமான நிலைய பாதுகாப்புக்காக சுவீகரித்து வைத்துள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் துறைசார் அமைச்சர் விமல் ரத்நாயக்காவிடம் கோரிக்கை முன்வைத்தார்.

இதன்போது பதிலளித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க,

காங்கேசன்துறை துறைமுகத்தை வணிகத் துறைமுகமாக மூலமாக அபிவிருத்தி செய்யமாட்டோம். ஏனெனில், வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான காரணிகள் ஏதுவாக இல்லாத நிலையில் அம்பாந்தோட்டை மற்றும் ஒலுவில் துறைமுகங்கள் போன்று காங்கேசன்துறை துறைமுகத்தை மாற்ற எமது அரசாங்கம் விரும்பவில்லை.

அதுமட்டுமல்லாது காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா வழங்கிய நிதி போதாது- எனத் தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், இந்தியாவிடம் வேண்டுமானால் நாங்கள் பேசி மேலதிக நிதியை பெற்று தருகிறோம். துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுங்கள் எனக் கூறினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அமைச்சர், இந்தியாவிடம் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் பேசியுள்ளார். நாங்களும் பேசியுள்ளோம். ஆனால் வணிகத் துறைமுகமாக அதை மாற்றுவதற்கு முடியாது - என்றார்.

இதன்போது, சிறீதரன், நீங்கள் எவ்வாறு ஆய்வு செய்யாமல் பொருத்தமில்லை எனக் கூற முடியும் என்றார்.

பதில் வழங்கிய அமைச்சர், ஆய்வறிக்கை இருக்கிறது. பாராளுமன்றத்தில் உங்களுக்கு வழங்குகிறேன் - என்றார்.

யாழ்ப்பாண விமான நிலைய பாதுகாப்புக்காக சுவீகரிக்கப்பட்ட பொதுமக்களின் காணிகளை எப்போது விடுவிப்பீர்கள்? ஏற்கனவே சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு ஏன் நட்டஈடு வழங்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மீண்டும் கேள்வி எழுப்பினார்.

மக்களின் காணிகள் மக்களுக்கு என்பது எமது அரசாங்கத்தின் நிலைப்பாடு. யாழ்ப்பாண விமான நிலையப் பாதுகாப்புக்காக கைப்பற்றிய காணி விடுவிப்பு தொடர்பில் தற்போது கூற முடியாது. படைத் தரப்பினருடன் கலந்துரையாடியே பதில் வழங்க முடியும் - என்றார். (அ-ஐ)

# உடுவில் மகளிர் கல்லூரியில் புதிய கட்டடம் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், செப். 20


உடுவில் மகளிர் கல்லூரியின் இரண்டாவது அதிபர் எலைசா அக்னியூ ஞாபகார்த்த கட்டடத் திறப்புவிழா நேற்று முன்தினம் உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி றொசானா மதுரமதி குலேந்திரன் தலைமையில் நடைபெற்றது.



விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு, இறை வணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பமானது. அதனை தொடர்ந்து வரவேற்பு நடனம், விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றன. பின்னர் குறித்த கட்டடமானது நாடாவெட்டி வைக்கப்பட்டு சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த விழாவில் பிரதம அதிதியாக தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி வே. பத்மதயாளன் கலந்துகொண்டார். அத்துடன், இந்தியாவின் கேரள மாநிலத்தை சேர்ந்த தென்னிந்திய திருச்சபையின் பேராயரான கலாநிதி மார்டீன் போர்காய் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். (ஐ-05)

# கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி; ஆவரங்கால் மத்தி சம்பியன்



தென்மராட்சி, செப். 20

மோகனதாஸ் விளையாட்டு கழகம் நடத்திய கரப்பந்தாட்ட தொடரில் சம்பியன் பட்டத்தை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகம் கைப்பற்றியது.

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கரப்பந்தாட்ட தொடரை நடத்தியது.

இதன் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. மோகனதாஸ் விளையாட்டு கழக மைதானத்தில் நடந்த இந்தப் போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் கே. கே. எஸ். அணியும் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் தொடர்ச்சியாக மூன்று சுற்றுக்களிலும் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்று கிண்ணத்தை தனதாக்கியது. (ஐ)

# மீனவர்களை தாக்கிய 6 பேருக்கு விளக்கமறியல்!

வடமராட்சி, செப். 20

மீனவர்களை தாக்கியும் வாளால் வெட்டியும் காயப்படுத்திய குற்றச்சாட்டில் கைதான 6 சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி கற்கோவளம் வாடி பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வை மீனவர்கள் தடுத்தனர். இதன்போது, மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்த 6 பேர் மீனவர்களை தாக்கியதுடன், வாளால் வெட்டியும் காயப்படுத்தினர். அத்துடன், வாடியையும் அடித்து உடைத்தனர்.

இந்தக் குற்றச்சாட்டில் 6 சந்தேகநபர்களை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்திருந்தனர். இவர்கள் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் 6 பேரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேலும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட வேண்டியுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-02)



# வலி. மேற்கு பிரதேச சபையில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 20

வலி. மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றபோது தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலி. மேற்கு பிரதேச சபையின் அமர்வு ச. ஜெயந்தன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினரான சுபாஜினி தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான கோரிக்கையை சபையில் முன்வைத்தார்.

இதனை அனைத்துக் கட்சியின் உறுப்பினர்களும் ஏற்றனர். இதைத் தொடர்ந்து இரு நிமிடங்கள் அக வணக்கம் செலுத்தி, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-05)

# போதைப்பொருட்களுடன் வடமராட்சியில் ஒருவர் கைது

வடமராட்சி, செப். 20

வல்வெட்டித்துறையில் ஐஸ், கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் நேற்று முன்தினம் காகேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பொலிஸார் திடீர் சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

இதன்போது, மாணவர்கள் உட்பட பலருக்கு போதைப்பொருள் விற்பனை செய்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை கைது செய்தபோது அவரிடமிருந்து 12 கிராம் 37 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 61 கிராம் கஞ்சா, 20 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன. அத்துடன், போதைப்பொருட்களை விற்பனை செய்த ஒரு தொகை பணம், வாள் என்பவையும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் ஊடாக நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ-02)

# கனகராயன்குளம் விபத்து; வெளிநாட்டு பிரஜை பலி!

வவுனியா, செப். 20


சைக்கிளில் சென்று கொண்டிருந்த வெளிநாட்டவரை பாரவூர்தி மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

வவுனியா - கனகராயன்குளம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் ஜேர்மனியை சேர்ந்த நபரே உயிரிழந்தார்.

கொழும்பு நோக்கி சென்ற பாரவூர்தியே விபத்தை ஏற்படுத்தியது. இதில், படுகாயமடைந்த வெளிநாட்டு பிரஜை வவுனியா பொது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்தார்.

விபத்தை ஏற்படுத்திய பாரவூர்தியின் சாரதியை கனகராயன்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ-10)

# இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட ஸ்கந்தபுரம் நூலகம் திறந்துவைப்பு



கிளிநொச்சி, செப். 20

கரைச்சி பிரதேச சபையால் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்ட ஸ்கந்தபுரம் நூலகம் நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், கரைச்சி பிரதேச செயலாளர் த. முகுந்தன் ஆகியோர் நூலகத்தை திறந்து வைத்தனர்.

கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கைப்பந்து போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற அக்கராயன் மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.09.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், புரட்டாதி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வடக்கு எழுச்சி பெறும்

இந்த அரசாங்கத்தின் காலத்தில் வடக்கு மாகாணம் எழுச்சி பெறும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்திருக்கிறார். அவ்வாறு நடந்தால் அது சிறப்பானது - அதன் பின்னர், இந்து அரசாங்கத்துடன்தான் தமிழ் மக்கள் நிற்பர் என்பதில் ஐயமில்லை. ஆனால், விடயங்கள் பேச்சளவோடு நின்றுவிடாமல் செயலளவில் நிகழ வேண்டும். இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக ஒரு தென்னிலங்கை கட்சிக்கு அதிலும், தமிழ் மக்கள் தொடர்பில் கடந்த காலத்தில் எதிர்மறையான நிலைப்பாடுகளை வரலாறாகக் கொண்டிருந்த ஜனதா விமுக்தி பெரமுனவுக்கு (ஜே. வி. பி.) அவர்கள் வாக்களித்திருந்தனர்.

வரலாற்றில் முதன்முறையாக தமிழ்த் தேசியவாத அரசியல் கோஷங்களைப் புறந்தள்ளி தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர். வரலாற்றில் முதன்முறையாக ஒரு தென்னிலங்கைக் கட்சியைப் பார்த்து தமிழ்த் தேசிய கட்சிகள் அச்சமடைந்தன. அந்த அச்சத்தின் விளைவாகவே அடுத்து வந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது, தமிழ்த் தேசிய கட்சிகள் என்பவை தங்களின் தேர்தல் பிரசாரங்களில் ஜே. வி. பிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று வெளிப்படையாகக் கூறுமளவுக்கு நிலைமையிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலிலும் அநுர குமார திஸநாயக்கவுக்கு வாக்களிக்க வேண்டாம் என்றே தமிழ்க் கட்சிகள் கோரின. சஜித் பிரேமதாஸவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வாக்களிப்பதிலேயே அவர்களுடைய நாட்டம் இருந்தது. ஆனால், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு ஆதரித்த கட்சிகள் அங்கும் இங்கும் என்னும் இரு தலைக் கொள்ளி எறும்புபோல் இருந்தன. ரணிலையும் சஜித்தையும் சந்தித்துக் கொண்டன. ஆனால், பொதுவெளியில் அநுர குமாரவை எதிர்த்துப் பிரசாரம் செய்தன.

ஆனால், இத்தனைக்குப் பின்னரும்கூட பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் கட்சிகளின் கதைகளை புறந்தள்ளியே வாக்களித்திருந்தனர். ஆனால், ஜே. வி. பியின்மீது குறிப்பாக, அதன் தலைவரான அநுர குமார திஸநாயக்கமீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை அவர் காப்பாற்றியிருக்கிறாரா என்னும் கேள்வி உண்டு. முதலில் மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும், அதனைத் தொடர்ந்து மாகாண சபைகள் மத்தியின் தேவையற்ற தலையீடுகளின்றி இயங்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். மாகாண சபையிலிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் தொடர்பில் நேர்மையான அணுகுமுறையுடன் கூடிய மீளாய்வு இடம்பெற வேண்டும். அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அபிவிருத்தியில் சிறந்தோங்கக்கூடிய சூழலை ஒரு சிறந்த மாகாண ஆளுகையுடன் முன்னெடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றால்தான் தமிழ் மக்கள் ஜனாதிபதி அநுர குமாரமீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு அவர் உண்மையாக இருக்கிறார் என்று பொருளாகும். வடக்கு, கிழக்கிலிருந்து தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டிருக்கும் மக்கள் பிரதிநிதிகளை நம்பி தமிழ் மக்கள் ஜே. வி. பிக்கு வாக்களிக்கவில்லை என்பதை ஜனாதிபதியும் ஜே. வி. பியின் அரசியல் குழுவும் நன்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

அநுர குமார திஸநாயக்க என்னும் ஒரு மனிதரையும் - அவர் எங்களை ஏமாற்ற மாட்டார் என்னும் நம்பிக்கையிலுமே தமிழ் மக்கள் தமிழ் கட்சிகளை நிராகரித்திருந்தனர். இதுதான் உண்மை - இது பொய்யல்ல மாறாக உண்மைதான் என்பதை நிரூபிக்க வேண்டியதுதான் அரசாங்கத்தின் கடமையாகும். பொருளாதாரம் முக்கியம். ஆனால், அத்தோடு தமிழ் மக்களை முழுமையாக திருப்திப்படுத்திவிட முடியாது. மாகாண ஆளுகையில் தமிழ் மக்களின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

# பஸ்ஸில் இருந்து தவறி விழுந்து இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

## உருத்திரபுரம் பகுதியில் துயரம்

கிளிநொச்சி, செப். 20

கிளிநொச்சியில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பேருந்தில் இருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உருத்திரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆடை தொழிற்சாலை பணியாளர்களை ஏற்றி வந்த குறித்த பேருந்தில் இருந்து இறங்குவதற்காக மிதிபலகையில் பயணித்த நிலையில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உருத்திரபுரத்தைச் சேர்ந்த 24 வயதான சுரேஸ்குமார் சுகிர்தன் என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தை அடுத்து பேருந் தின் சாரதியை பொலிஸார் கைது செய்தனர். (அ)

# டிஜிற்றல் பணம் செலுத்தும் செயலி யாழில் அறிமுகம்!



கொழும்பு, செப். 20

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் எண்ணக்கருவுக்கு இணங்க கோ பே என்ற அரசின் டிஜிற்றல் பணம் செலுத்தும் செயலி அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அதிகாரபூர்வமாக தொடங்கப்பட்டது.

இந்த நிகழ்வு துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையிலும், பாராளுமன்ற உறுப்பினரான மருத்துவர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா மற்றும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரது பங்கேற்புடன் நடைபெற்றது.

நாட்டை டிஜிற்றல் தொழில்நுட்பத்தின் வழியாக சாதாரண மக்களுக்கு எளிதில் அணுகக்கூடிய வெளிப்படையானதும் சிக்கனமானதுமான மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தும் அரச திட்டங்களுக்கு வழிகாட்டும் பெரும் முயற்சியின் ஒரு பகுதியாகும்.

மேலும் கோ பே செயலியின் மூலம், மக்கள் அரசு சேவைகளை பாதுகாப்பாகவும் சுலபமாகவும் நம்பகத்தன்மையாகவும் பயன்படுத்த முடியும்.

இந்நிகழ்வில் லங்கா பே துணை தலைமை அதிகாரி, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள். (அ)

# முல்லைத்தீவு எல்லைக் கிராமங்களில் தமிழர்களின் விவசாயத்துக்கு இடையூறு

## தடைகளை உடைத்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் என்கிறார் ரவிகரன்

முல்லைத்தீவு, செப். 20

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை கிராமங்களான கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தமிழ்மக்கள் தமது பூர்வீக மானாவாரி விவசாய நிலங்களில் பெரும்போக நெற்செய்கைக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடும்போது வனவளத்திணைக்களம் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த எல்லைக்கிராம மக்களின் விவசாய நடவடிக்கைக்கு இடையூறுகள் ஏற்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்த வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், தொடர்ந்தும் தடைகள் ஏற்படுத்தப்பட்டால் தடைகளை உடைத்தெறிந்து விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.


மக்களின் அழைப்பையேற்று குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று நிலமைகளை ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது மக்களின் விவசாய நடவடிக்கைகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவது பொருத்தமான விடயமில்லை. இவ்வாறு இடையூறுகளை ஏற்படுத்தினால் இந்த மக்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்படும். எனவே எமது மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்ற வகையில் செயற்படும் திணைக்களங்களின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ளமுடியாது.

தொடர்ந்தும் எமது மக்களுக்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டால் அந்த தடைகளை உடைத்து எமது மக்கள் நெற்செய்கை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 20 சனிக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 04
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சதுர்த்தசி




**மேடம்**

எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**

குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள்.வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**மிதுனம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கடகம்**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டிவரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**சிம்மம்**

விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள் .

**கன்னி**

எதிர்பார்ப்புகள்நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**துலாம்**

உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் பேசுவீர்கள். செயல்படுவீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும்.

**விருட்சிகம்**

பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**தனுசு**

சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைத்தூக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**மகரம்**

மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கும்பம்**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். அலுவலகத்தில் சக ஊழியர்களை விட அதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும்.

**மீனம்**

குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

# இருதய - குருதிக்குழாய் உட்செலுத்துகை ஆய்வுகூடத்தின் சேவைகள் மீள ஆரம்பம்

வவுனியா, செப். 20

வவுனியா பொது மருத்துவமனையில் ஓராண்டுக்கு மேலாக மூடப்பட்டிருந்த இருதய மற்றும் குருதிக்குழாய் ஆய்வுகூடம் நேற்று முன்தினம் தனது செயல்பாட்டை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

நெதர்லாந்து அரசின் நிதிப் பங்களிப்போடு இருதய மற்றும் குருதிக்குழாய் ஆய்வுகூடம் அதற்கான உபகரணங்களோடு அமைக்கப்பட்ட நிலையிலும் மனிதவளப் பற்றாக்குறை காரணமாக இயங்காநிலையில் காணப்பட்டது.

இதன் காரணமாக வவுனியா மற்றும் அதனை அண்டிய பகுதி மக்களும் கிழக்கு மாகாண மக்களும் யாழ். போதனா மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்பட்டது.

குறித்த நிலையை உணர்ந்து கொண்ட சுகாதார அமைச்சு அதனைத் தீர்ப்பதற்குரிய மூலோபாய நடவடிக்கையாக வெளிநாட்டில் பயிற்சி பெற்று நாடு திரும்பிய இருதய சிகிச்சை நிபுணர் தி. வைகுந்தனை வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு நியமித்த பின்னர் குறித்த இருதய மற்றும் குருதிக்குழாய் ஆய்வுகூடத்தை மீள ஆரம்பிப்பதற்கான முழுமையான பணியில் ஈடுபட்டிருந்தார்.

இதன் பிரகாரம் இருதய சிகிச்சை நிபுணர் பி. லக்ஸ்மன் உள்ளிட்ட அணியினரின் அர்ப்பணிப்பு மிக்க வழிகாட்டலுடன் மீண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-10)

# "எம்மை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நீங்கள் சபையை நடத்துங்கள்"

யாழ்ப்பாணம், செப். 20

வலி. தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையில் தொடர்ச்சியாக உறுப்பினர்கள் சத்தமிட்டு பேசுவதால் எங்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நீங்கள் சபையை நடத்துங்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் எட்வெட் மரியவாசினி, தவிசாளரிடம் கூறினார்.

மானிப்பாய் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போது அவர் மேலும் கூறுகையில்,

"நாங்கள் எமது மக்களின் பிரச்னைகள் தொடர்பான கோரிக்கைகளை சபைக்கு கொண்டுவந்தாலும் அதனை இங்கு முன்வைக்க முடிவதில்லை. முன்னால் இருப்பவர்களே தொடர்ந்து எழுந்து பேசுகின்றனர். பிரச்னைப்படுத்துகின்றனர். ஆகையால் எமக்கு சபையில் பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

ஒவ்வொரு விடயத்துக்கும் ஒவ்வொருத்தருக்கும் குறிப்பிட்ட அளவு நேரத்தை ஒதுக்கி வழங்குங்கள். இல்லாவிட்டால் எங்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நீங்கள் சபையை நடத்துங்கள்- என்றார்.

இதற்குப் பதிலளித்த தவிசாளர் ஜெசீதன், அனைவரும் கருத்துரைப்பதற்கு தான் இந்த சபை. இந்த சபையின் விதிகளை ஏற்று நடக்குமாறு நான் ஒவ்வொரு கூட்டத்திலும் அறிவுறுத்தி வருகிறேன். அதை கருத்தில் கொள்ளாமல் சில சந்தர்ப்பங்களில் உணர்ச்சி வசப்பட்டுத்தான் பிரச்னைகளுக்குள் செல்கின்றார்கள் - என்றார்.

(எ-05)

# கொழும்புத்துறை இறங்குதுறை புனரமைப்பு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், செப். 20

கொழும்புத்துறை இறங்குதுறை புனரமைக்கப்படுவதன் ஊடாக இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரம் மேம்படுவது மாத்திரமல்ல இந்தப் பகுதியுமே அழகாக மாறவுள்ளது. இதற்கான நடவடிக்கையை எடுத்த அரசாங்கத்தையும் அமைச்சர் இ. சந்திரசேகரையும் பாராட்டுகின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை இறங்குதுறை கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சின் 140 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு ஆரம்பமாகவுள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வு கொழும்புத்துறை இறங்குதுறையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர், "அபிவிருத்தி என்பது தனியே பௌதீக முன்னேற்றம் மாத்திரம் அல்ல. அந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரமும் மேம்பட வேண்டும். இன்றைய முயற்சியும் அவ்வாறானதொன்றே. நான் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபராக இருந்தபோதும் இந்த இறங்குதுறையை அபிவிருத்தி செய்வதற்கு பல முயற்சிகளை எடுத்திருந்தேன். ஆனால், அது அப்போது சாத்தியப்படவில்லை. இன்றைய அரசாங்கத்தின் காலத்தில் அது சாத்தியமாகியிருக்கின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பதவியேற்று ஓராண்டு காலத்தினுள்ளேயே மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் வடக்கு மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதில் இந்தத் திட்டமும் ஒன்று. இதற்காக ஜனாதிபதிக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் வடக்கு மக்கள் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

யாழ். நகரத்திலிருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தினுள் இந்தப் பகுதி இருந்தாலும் அழகான கிராமமாக இருக்கவில்லை. இன்று இந்த இறங்குதுறை புனரமைப்பு என்பது எதிர்காலத்தில் இந்தக் கிராமத்தையும் அழகாக மாற்றும் என்று நம்புகின்றேன்.

இந்த முயற்சிகளை முன்னெடுத்துள்ள அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க மற்றும் இ. சந்திரசேகர் ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்" -என்றார்.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், எஸ். சிறீபவானந்தராசா, ஜெ. றஜீவன், மாநகர சபை உறுப்பினர்கள், கடற்றொழில் அமைச்சின் செயலர், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ-3)

# "மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண்டும்"

யாழ்ப்பாணம், செப். 20

இலங்கையில் காணப்படும் பாரம்பரியமான மாளிகைகளில் ஒன்றான மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமானது என அமைச்சர் பிமல் ரத்நாயக்கா தெரிவித்தார்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள மந்திரிமனையை நேற்று முன்தினம் மாலை அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர். இதன் பின்னரே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது மந்திரிமனையின் தற்போதைய நிலை தொடர்பிலும் அதனைப் பாதுகாப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (எ-03)

# ஆளும் தரப்பு உறுப்பினர்கள் வெளிநடப்பு

வவுனியா, செப். 20

மக்கள் பிரச்னை குறித்து பேசுவதற்கு அனுமதிக்காமையால் வவுனியா வடக்கு தவிசாளருக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உப தவிசாளர் உள்ளிட்ட 7 ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

வவுனியா வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு சபா மண்டபத்தில் தவிசாளர் தி. கிருஷ்ணவேணி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது சபை அமர்வு நிகழ்ச்சி நிரலில் ஏனைய விடயங்கள் என்ற விடயம் உள்ளடக்கப்படவில்லை. கடந்த காலங்களில் எம்மால் முன்மொழியப்பட்ட விடயங்கள் 7 நாட்களுக்கு முன்னரே வழங்க வேண்டியிருந்தது. எனவே, ஏனைய விடயங்கள் நிகழ்ச்சி நிரலில் தேவை எனவும் இதன் மூலமே மக்கள் பிரச்னையை தீர்க்க முடியும் எனத் தெரிவித்து ஆளும் கட்சி கட்சி உறுப்பின்கள் சிலர் தவிசாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

அதற்கு தவிசாளர் தி. கிருஷ்ணவேணி அவ்வாறு அனுமதி வழங்க முடியாது. 7 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பித்த விடயங்களை மட்டுமே பேச முடியும் எனத் தெரிவித்தார். இதனால் தவிசாளருக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனையடுத்து உப தவிசாளர் தி. சஞ்சுதன் உட்பட ஆளும் கட்சியைச் சேர்ந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் 7 பேர் வெளிநடப்பு செய்தனர். (எ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனங்கள் இறக்குமதி மூலம் 430 பில்லியன் ரூபா வருமானம்!

## சுங்கப் பணிப்பாளர் நாயகம் தகவல்



கொழும்பு, செப். 20

**இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களிலிருந்து சுங்கத் துறை தற்போது கிட்டத்தட்ட 430 பில்லியன் ரூபாய் வரி வருவாயைப் பெற்றுள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சீவலி அருகோட தெரிவித்தார்.**

இந்த ஆண்டு வாகன இறக்குமதி மூலம் சுங்கத்துறை 450 பில்லியன் ரூபாய் வருவாய் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கம் வாகன இறக்குமதியை இன்னும் கட்டுப்படுத்தாததால், வாகன இறக்குமதியிலிருந்து சுங்கம் ஈட்டக்கூடிய வரி வருவாய் 450 பில்லியன் ரூபாயைத் தாண்டும்.

மின்சார வாகனங்கள் தொடர்பாக நீதிமன்றம் அளிக்கும் முடிவின் மூலம் வாகனத்தின் மின்சார மின்கலத் திறன் தொடர்பான பிரச்னை தீர்க்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# புலிகள் தோற்கடிக்கப்பட்டாலும் பிரிவினைவாதம் இப்போதும் உண்டு!

## பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 20

"புலிகள் அமைப்பு ஆயுத ரீதியில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் பிரிவினைவாத சிந்தனை உடையோர் இன்னும் இருக்கின்றனர். எனவே, மகிந்த ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு ரீதியிலான பிரச்சினை உள்ளது."- என்று பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் முன்னாள் பிரதி அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் 5ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ, அரசாங்க வதிவிடத்தில் இருந்து வெளியே றியமை தொடர்பில் பலரும் பலகோணங்களில் கருத்துகளை வெளியிடுகின்றனர்.

மகிந்த ராஜபக்ஷ என்பவர் அரசியல்வாதி மட்டும் அல்லர், இந்நாட்டில் நிலவிய 30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவந்த தலைவர் அவர். சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணியாமல் நாட்டுக்காக தமது பொறுப்பை சரிவர நிறைவேற்றியவர்.

மகிந்தவுக்கு மூன்று மகன்மார் உள்ளனர், அவர்களால் மகிந்த ராஜபக்ஷவை பார்த்துக் கொள்ளமுடியாதா எனச் சிலர் கேட்கின்றனர். தனது தந்தையை பார்த்துக்கொள்ளும் இயலுமை நாமலுக்கு உள்ளது. எனினும், பிரிவினைவாத போரை முடிவுக்கு கொண்டுவந்த அவருக்கு பாதுகாப்பு வழங்குவதில்தான் பிரச்னை உள்ளது.

புலிகள் அமைப்பு ஆயுத ரீதியில் தோற்கடிக்கப்பட்டிருந்தாலும் பிரிவினைவாத சிந்தனை உடையோர் இன்னும் இருக்கின்றனர். இந்நாட்டை அராஜக நிலைக்கு கொண்டுசெல்ல முற்படுகின்றனர். அதனால்தான் அறகலய காலத்தில்கூட நிதி வாரி வழங்கப்பட்டது. அதன் மற்றுமொரு அங்கமாகவே மகிந்த அநாதரவாக்கப்பட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் விஜேராம மாவத்தைக்கு வரமாட்டார். அவரை மக்கள் பார்த்துக்கொள்வார்கள். உலகில் நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுதந்த தலைவரை வேறு நாடுகள் இவ்வாறு செய்வதில்லை. தலைவர்களை பாதுகாப்பார்கள். அவர்கள் உயிரிழந்த பின்னர்கூட உடலம் பாதுகாக்கப்பட்டு, மரியாதை செலுத்தப்படும்-என்றார். (அ)

# மருந்து, அழகுசாதனப் பொருள்கள் உற்பத்தித்துறையில் புதிய சட்டம்!

கொழும்பு, செப். 20

மருந்து, கால்நடை மருந்து, ஆயுர்வேத மற்றும் அழகுசாதனப் பொருள்களின் உற்பத்தித் துறையில் தேவையேற்பட்டால், புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும் என தொழில் அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மருந்து, கால்நடை மருந்து, ஆயுர்வேத மற்றும் அழகுசாதனப் பொருட்கள் உற்பத்தித் துறை தொடர்பான வரவு செலவுத்திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்தித் திட்டத்துக்கு மருந்து, கால்நடை மருந்து, ஆயுர்வேத மற்றும் அழகுசாதனப் பொருட்கள் உற்பத்தித்துறை முழு ஆதரவையும் வழங்கும் என்று இக் கலந்துரையாடலில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது அந்த அனைத்து முன்மொழிவுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் என்றும், தேவைப்பட்டால் தரமான பொருட்களை உற்பத்தி செய்ய புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும் என்றும் தொழில் அமைச்சரும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

கொழும்பு, செப். 20

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக, 5 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் கட்ட மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# ரோஹிதவிடம் வாக்குமூலம் பெற உத்தரவு

கொழும்பு, செப். 20

பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவிடம் வாக்குமூலம் பெறுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு கடுவெல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிக்கும்போது, அவர் அமைச்சராக இருந்த காலத்தில் நிதி மோசடி நடந்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# சீனப் பிரஜை சடலமாக மீட்பு!

கொழும்பு, செப். 20

தெஹிவளை, அல்விஸ் வீதியில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் சீன நாட்டவர் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தெஹிவளை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த தொலைபேசி தகவலைத் தொடர்ந்து அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் சீன மற்றும் மியான்மர் நாட்டவர்கள் குழு ஒன்று 11 மாடிக் கட்டடத்தின் 10 ஆவது மாடியில் வசித்து வருகின்றது.

இறந்தவர் வளாகத்தின் மேல் மாடியில் இருந்து விழுந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

எவ்வாறெனினும், இது தொடர்பான விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மக்களிடம் வறுமைப்பாடல் பாடியோர் அரசியல் மூலம் செல்வந்தர்களாகினர்!

## அரசை சாடுகின்றார் மகிந்த அமரவீர

கொழும்பு, செப். 20

மக்களிடம் வறுமைப் பாடல் பாடிக் கொண்டிருந்தவர்கள் தற்போது தனவந்தர்களாகியுள்ளனர். எந்தவொரு தொழிலும் இன்றி முழு நேர அரசியலில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணியினருக்கு இந்நாட்டு 76 ஆண்டு காலம் சாபத்தை அனுபவித்ததாகக் கூறுவதற்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

தமது அரசாங்கம் ஆட்சியமைத்ததன் காரணமாகவே அரசியல்வாதிகளின் சொத்து விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக சில அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். 2023ஆம் ஆண்டு எமது அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டத்தின் ஊடாகவே இந்த விவரங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதை அரசாங்கத்துக்கு நினைவுபடுத்துகின்றேன். ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் நாம் அங்கத்துவம் வகித்த அமைச்சரவையில் நீண்ட கலந்தாலோசனையின் பின்னர் இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் நாமும் எமது சொத்து விவரங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றோம். தற்போது அவை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் அந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே இது இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை எனக் கூறினால் அது முற்றுமுழுதாக உண்மைக்கு புறம்பானதாகும்.

தற்போது அமைச்சர்களின் சொத்து விபரங்கள் பெறும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கின்றன. வாழ்நாள் முழுவதும் அரசியலில் ஈடுபட்டு வேறு எந்த தொழிலும் செய்திருக்காத அமைச்சர் வசந்த சமரசிங்க போன்றோரின் சொத்து மதிப்பு பல கோடிகளாகும். 76 ஆண்டுகள் சாபகாலம் எனக் கூறியவர்கள் அந்தக் காலப்பகுதியில் அரசியல் ஊடாக மாத்திரம் இவ்வாறு கோடிக்கணக்கான சொத்துக்களை சேமித்திருக்கின்றனர்-என்றார். (அ)

# சதுப்பு நிலத்தில் சிக்கியிருந்த யானை மீட்பு!



கொழும்பு, செப். 20

கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜனரஞ்சன குலத்திற்கு அருகிலுள்ள சதுப்பு நிலத்தில் இரண்டு நாட்களாக சிக்கியிருந்த ஒரு காட்டு யானையை வனவிலங்கு அதிகாரிகள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பெரும் முயற்சியின் பின்னர் மீட்டெடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை அப்பகுதியில் மாடு மேய்க்கச் சென்ற ஒருவர், சேற்றில் ஒரு யானை அசைவற்று இருப்பதைக் கண்டுள்ளார்.

அவர் உடனடியாக வனவிலங்கு அதிகாரிகளுக்கு இது குறித்து தகவல் அளித்துள்ளார். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த வனவிலங்கு அதிகாரிகள், யானையின் நிலையைக் கண்டறிந்து, அதனை மீட்கும் நடவடிக்கைகளைத் தொடங்கினர்.

யானை ஆழமான சேற்றில் சிக்கியிருந்ததாலும், இரவு நேரமாக இருந்ததாலும் மீட்புப் பணிகள் உடனடியாகத் தடைப்பட்டன. மறுநாள் காலை வனவிலங்கு அதிகாரிகள், சூரியபுர பொலிஸார், இராணுவத்தினர், மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் என பலரும் இணைந்து மீட்பு நடவடிக்கையை மீண்டும் தொடங்கினர்.

யானையின் வயது சுமார் பதினைந்து என்றும், அதற்கு ஒரு சிறிய தந்தம் இருந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இரண்டு நாட்களாக சேற்றில் சிக்கியிருந்ததால் யானை சோர்வாகக் காணப்பட்டது. நீண்ட நேரம் போராடிய குழுவினர், இயந்திரங்களின் உதவியுடன் யானையை கவனமாக சேற்றிலிருந்து வெளியே எடுத்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதய சத்திர சிகிச்சை பிரிவு மட்டக்களப்பில் திறந்து வைப்பு

மட்டக்களப்பு, செப். 20

மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் சுகாதார சேவை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன் நிர்மாணிக்கப்பட்ட இருதயவியல் பிரிவு கட்டடம் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவின் பங்கேற்புடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

324 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இருதய சத்திர சிகிச்சைப் பிரிவுடன், எண்டோஸ்கோபி பிரிவும் புனரமைப்பு செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.



இந்த நிகழ்வில் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர்கள், வைத்திய நிபுணர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் என மருத்துவமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த மருத்துவமனையின் குறைபாடாக திகழ்ந்து வரும் எம். ஆர். ஐ. பிரிவு எதிர்வரும் ஜனவரி மாதமளவில் திறந்து வைக்கப்படுமெனவும் சுகாதாரத் துறைசார்ந்த 17 பாரிய திட்டங்களுக்கான அனுமதியை கடந்த அமைச்சரவை அமர்வில் சமர்ப்பித்து அவற்றுக்கும் நாம் அனுமதியைப் பெற்றுள்ளோம். அவற்றின் ஊடாக மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் நிலவும் கட்டட குறைபாடுகள் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் நாம் பூர்த்தி செய்து தருவோம் என அமைச்சர் உறுதியளித்தார்.

(எ)

# திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

திருகோணமலை, செப். 20

திருகோணமலை மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி.எம்.ஹேமந்த குமாரவின் ஒழுங்கமைப்பில் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப், ரொசான் அக்மீமன, மாகாண பிரதம செயலாளர், உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதில் மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் மீளாய்வு செய்யப்பட்டது. உட்கட்டமைப்பு, சுகாதாரம், கல்வி மேம்பாடு தொடர்பிலும் மக்கள் பிரச்னைகளுக்கான தீர்வுகள் பற்றிய பல விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. (எ-12)



# கர்ப்பவதிகளுக்கு உதவி

மட்டக்களப்பு, செப். 20

பெரண்டினா நிறுவனத்தின் லைப் லைன் - 2025 வேலைத் திட்டத்தின் ஓரங்கமாக கர்ப்பவதிகளுக்கான பொதி வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது.

இதில், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பெரண்டினா நிறுவன முகாமையாளர்கள், ஊழியர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-08)

# நோயாளிகளுடன் சென்ற அம்புலன்ஸ் திடீர் விபத்து

நோர்வூட், செப். 20

பொகவந்தலாவ பிரதேச மருத்துவமனையிலிருந்து டிக்கோயா ஆதார மருத்துவமனைக்கு இரண்டு நோயாளிகளை ஏற்றிச் சென்ற அம்புலன்ஸ் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ மாவட்ட மருத்துவமனையில் இருந்து நோயாளி ஒருவரை டிக்கோயா கிழங்கன் ஆதார மருத்துவமனைக்கு கொண்டு சென்று கொண்டிருந்த போது நோர்வூட் பகுதியில் இருந்து வெஞ்சர் பகுதிக்கு சென்ற பால் லொறி அம்புலன்ஸில் மோதியது. பொகவந்தலாவ மாவட்ட மருத்துவமனைக்குச் சொந்தமான அம்புலன்ஸூக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து காரணமாக ஹற்றன் - பொகவந்தலாவ பிரதான வீதியின் போக்குவரத்து சுமார் 30 நிமிடங்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நோர்வூட் பொலிஸாரின் தலையீட்டால் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை பால் லொறியின் சாரதி நோர்வூட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# ஹற்றனில் திருட்டு! 21 வயது யுவதி கைது

ஹற்றன், செப். 20

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எபோட்ஸ்சிலி தோட்டப் பகுதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து 195,000 ரூபாய் பணத்தை திருடிய 21 வயது யுவதி ஒருவரை ஹற்றன் பொலிஸார் கைது செய்தனர். இந்தக் கைது சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

எபோட்ஸ்சிலி தோட்டப் பகுதியில் உள்ள யுவதி, அயல் வீட்டிற்குச் சென்று, அந்த வீட்டில் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த பெட்டியில் இருந்த ஓர் இலட்சம் ரூபாய் பணத்தை பெட்டியுடன் எடுத்துக் கொண்டார்.

மேலும், மிகுதி 95,000 ரூபாயை ஹற்றன் பகுதியில் உள்ள இலங்கை வங்கியின் ஏ.டி.எம். இயந்திரத்தில் பெற்றுக் கொண்டு, பணம் வைக்கப்பட்டிருந்த பெட்டியை தேயிலை மலையில் வீசியதாக ஹற்றன் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பணத்தின் உரிமையாளருக்கு குறித்த யுவதி மீது சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, நேற்று முன்தினம் மாலை ஹற்றன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தார். இந்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், குறித்த யுவதியை கைது செய்ததோடு, சந்தேக நபரிடமிருந்து திருடப்பட்ட பணத்தையும் மீட்டனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட யுவதி ஹற்றன் பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# காரைதீவில் காளான் செய்கை ஊக்குவித்தல் செயல்திட்டம்

காரைதீவு, செப். 20

அம்பாறை மாவட்டம், காரைதீவு விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் காளான் பயிர்ச் செய்கை மற்றும் உணவு தயாரித்தல் தொடர்பான கூட்டு விழிப்புணர்வு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக காரைதீவு பிரதேச விவசாயப் போதனாசிரியர் திருமதி சஜிகலா ரகுநந்தன் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் உதவி விவசாயப்பணிப்பாளர் திருமதி அழகுமலர் ரவீந்திரன் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஏரி. தஸ்னிம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, காளான் செய்கை உற்பத்தி தொடர்பில் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது.

அத்துடன் காளான் உணவை எவ்வாறு சமைப்பது, எவ்வாறு உட்கொள்வது என்பது தொடர்பிலும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

காளான் சூப் தயாரித்தல் தொடர்பாக செய்முறையுடன் கூடிய விளக்கம் அளிக்கப்பட்டது.

இதேவேளை, காளான் செய்கைக்கான உள்ளீடுகள், உபகரணங்கள் வழங்கப்பட்டு பெண்களின் சுயதொழிலை ஊக்குவித்து வாழ்வாதாரத்தை உயர்த்துதல் சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

(எ-08)

# வறுமை ஒழிப்புத்திட்டம் தொடர்பில் திருகோணமலையில் விழிப்புணர்வு

திருகோணமலை, செப். 20

ஜனாதிபதியின் எண்ணக்கருவில் அமைந்த கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமான வறுமை ஒழிப்பு செயல் திட்டத்தின் "சமூக சக்தி" வேலைத்திட்டம் தொடர்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சி திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அரசாங்கத்தின் கீழ் செயல்படுத்தப்படும் தேசிய அளவிலான திட்டங்களில் பொருளாதார அபிவிருத்தியின் நன்மைகள், சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிடையேயும் சமமாக பகிர்ந்தளிக்கப்படுதலை உறுதி செய்தல், கிராம மக்கள் மூலமாகவே கிராமப்புறங்களை முழுமையான அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதே சமூக சக்தி திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்போது சமூக வலுவூட்டல் மூலம் வறுமை ஒழித்தல் என்னும் தொனிப்பொருளில் இவற்றை செயல்படுத்தவுள்ள சமூக அபிவிருத்திக் குழுவின் சட்ட அடிப்படை, ஆக்க அமைவு, ஸ்தாபிப்பு மற்றும் பணிகள் தொடர்பில் தெளிவான விளக்கங்கள் சமூக சக்தி செயலகத்தின் பணிப்பாளர் புத்திக ஜெயதிஸ்ஸவால் அதிகாரிகளுக்கு தெளிவூட்டப்பட்டன.

இதில், ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பிரதீப் தனபால, மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கே. விஜயதாசன், மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முத்துநகர் விவசாயிகள் தொடர்ந்து போராட்டம்

திருகோணமலை, செப். 20

திருகோணமலை, முத்துநகர் விவசாயிகள் நேற்று மூன்றாவது நாளாக பொலிஸாரின் இடையூறுக்கு மத்தியில் தொடர் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்துநகர் விளைநிலங்களை உடனடியாகத் திருப்பிக் கொடு. இந்தியக் கம்பனிகளின் நில மற்றும் வளச் சூறையாடலுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்ற நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸார் போராட்டக்காரர்களை அந்த இடத்தை விட்டு அகற்ற முற்பட்ட போதும் கூட அது சாத்தியமாகவில்லை.

சூரிய மின் சக்தி திட்டத்துக்கு வழங்கப்பட்ட விவசாய காணிகளை மீளப் பெற்றுத்தரக் கோரியே இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல்...

விடப்படும் சைபர் அச்சுறுத்தல்களை அடையாளம் காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சைபர் அச்சுறுத்தல்கள், பாதிப்புகள் மற்றும் ஊடுருவல்களைத் தொடர்ந்து கண்காணித்து, பொருத்தமான தரப்பினர்களுக்கு உடனடியாகத் தெரிவிப்பதன் மூலம் அரசாங்க சைபர் கட்டமைப்புகள் மற்றும் பொது டிஜிற்றல் சேவைகளைப் பாதுகாப்பது இதன் பொறுப்பாகும்.

தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தால் கிடைக்கும் வெற்றிகளை விரைவாக உள்வாங்கிக் கொள்ளக்கூடிய நாடுகள் மிக விரைவாக முன்னேற்றத்தை நோக்கி நகரும். இந்த தேசிய சைபர் பாதுகாப்பு கட்டமைப்பு நமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் தேசிய பொருளாதாரத்துக்கும் பிரஜைகளின் வாழ்க்கை முறையைப் பாதுகாப்பதிலும் மிக முக்கிய பங்கு வகிக்கும்.

அரசியலைப் பார்த்தாலும் சரி, உலகப் பொருளாதாரத்தின் தன்மையைப் பார்த்தாலும் சரி, முக்கிய காரணி என்னவென்றால், அந்த நேரத்தில் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தின் வெற்றிகளை விரைவாக உள்வாங்கக்கூடிய நாடுகள் மிக விரைவாக வளர்ச்சியின் விளிம்பை நோக்கி நகர்கின்றன. தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞானத்தின் முன்னேற்றங்களை விரைவாக உள்வாங்கத் தவறும் நாடுகள் அதேபோன்று பின்தள்ளி விடப்படுகின்றன. இலங்கை என்ற ரீதியில் நாம் எதிர்நோக்கும் நெருக்கடி அதில்தான் அடங்கியுள்ளது என நான் நினைக்கிறேன்.

16 மற்றும் 17 ஆம் நூற்றாண்டுகளில் பல கருத்தியல்கள் உருவாக்கப்பட்டன என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், இந்த கருத்தியல் ரீதியாக கட்டமைக்கப்பட்ட பல விடயங்கள் இருபதாம் நூற்றாண்டில்தான் யதார்த்தமாகின. அரசியல் வெறும் அரசாட்சியால் நிர்வகிக்கப்பட்ட உலகில் மக்களின் பங்கேற்புடன் ஜனநாயக ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பது அதேபோன்று மனித உறவுகளில் புதிய வடிவங்கள் இவை அனைத்தும் 20 ஆம் நூற்றாண்டிலே நடைமுறை நிலைக்கு கொண்டு வரப்பட்டன. அதன்படி, 20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, இந்த டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகம் ஒரு முக்கிய பங்கை வகிக்கத் தொடங்கியது.

எமக்கு தெரிவு செய்ய இரண்டு பாதைகள் உள்ளன. முதலாவது, இந்த டிஜிட்டல் மயமாக்கலை மிக விரைவாக ஒருங்கிணைத்து அதை ஒரு நடைமுறை யதார்த்தமாக மாற்றுவதாகும். பின்னர் நாம் முன்னேறிய தேசங்களுடன் இணையாக பயணிக்க முடியும். அந்த தொழில்நுட்ப சாதனைகளை முறையாகப் பெறத் தவறுவதன் மூலம், நாம் உலகத்திலிருந்து நம்மை மேலும் தூரமாக்கிக் கொள்கிறோம்.

எனவே, டிஜிற்றல் மயமாக்கலின் மூலம், சிதைவடைந்த அரச இயந்திரத்தை மிகவும் திறமையான அரச இயந்திரமாக மாற்ற வேண்டும். குறிப்பாக, அரச இயந்திரத்தால் பிரஜைகளுக்கு வழங்கப்படும் சேவையை திறமையானதாக மாற்ற வேண்டும். திருப்திகரமான மற்றும் செயற்திறனான அரச சேவையை வழங்க, புதிய கட்டமைப்புகள் உருவாக்கப்பட வேண்டும், மேலும் அதன் செயல்திறனின் பலன்கள் மக்களை சென்றடைய வேண்டும். இதேபோன்று வெளிப்படைத்தன்மையும் மிக முக்கியமானது. நமது அரச இயந்திரம் வெளிப்படைத்தன்மை என்ற விடயத்தில் ஆழமான நெருக்கடியை எதிர் கொள்கிறது. கொள்முதல், மானியங்கள், ஆட்சேர்ப்பு மற்றும் கொள்கை முடிவுகளில் இது வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, இந்த வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதில் இந்த டிஜிற்றல் மயமாக்கல் மிகவும் முக்கியமானது - என்றார். (ஐ)

## திலீபன்...

நடைபெறுவது வழக்கம்.

இந்த நிலையில், நேற்றைய தினம் அந்தப் பகுதியிலிருந்த திலீபனின் திருவுருவப் படத்தை பொலிஸார் அகற்றியதுடன், அதனை கொண்டும் சென்றுள்ளனர்.

பொலிஸாரின் இந்தச் செயல்பாட்டை தமிழ்த் தேசிய செயல்பாட்டாளர்கள் கண்டித்துள்ளனர். (ஐ)

## ஹெரோயின்...

கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புலனாய்வு தகவல்களின் அடிப்படையிலேயே சந்தேகநபரை குருநகர் காவலரண் பொலிஸார் கைது செய்தனர்.

இதேநேரம், நேற்று முன்தினமும் குருநகரில் போதைப்பொருளுடன் தொடர்புடைய சந்தேகநபரான இளைஞர் கைது செய்யப்பட்டிருந்தார். இந்த வாரத்தில் மட்டும் யாழ். நகரப் பகுதியை அண்டிய பகுதிகளில் மட்டும் ஹெரோயின், ஐஸ் போதைப்பொருளுடன் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 21,610...

2026ஆம் ஆண்டும் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சுகளுக்கு 64 ஆயிரத்து 800 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது நடப்பு ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 3 ஆயிரத்து 55 கோடியே 50 இலட்சம் ரூபாய் அதிகமாகும்.

ஜனாதிபதி வசமுள்ள பாதுகாப்பு, நிதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மற்றும் ஜனாதிபதிக்கான செலவுகளுக்காக ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 715 கோடியே 99 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்த சாசன அமைச்சுக்கு ஆயிரத்து 450 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பௌத்த அலுவல்கள் திணைக்களத்துக்கு 135 கோடி ரூபாய் 28 கோடியே 50 இலட்சம் ரூபாய், இஸ்லாமிய சமய பண்பாட்டு திணைக்களத்துக்கு 20 கோடியே 40 இலட்சம் ரூபாயும் கத்தோலிக்க அலுவல்கள் திணைக்களத்துக்கு 17 கோடியே 80 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன.

2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்ட முன்மொழிவு எதிர்வரும் 26ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த நிலையிலேயே அதன், நிதி ஒதுக்கீடு விவரங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் இரண்டாவது மதிப்பீடு (வரவு, செலவு திட்ட உரை) நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதியால் எதிர்வரும் நவம்பர் 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நவம்பர் 8ஆம் திகதி முதல் டிசெம்பர் 5ஆம் திகதி வரை விவாதத்தை நடத்த பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

நவம்பர் 8ஆம் திகதி முதல் நவம்பர் 14ஆம் திகதி வரை 6 நாட்கள் இரண்டாவது மதிப்பீடு விவாதம் நடத்தப்படுவதுடன் 14ஆம் திகதி மாலை 6 மணிக்கு இரண்டாவது மதிப்பீடுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும். இதன் பின்னர், நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசெம்பர் 5ஆம் திகதி வரை 17 நாட்கள் குழுநிலை விவாதத்தை நடத்துவதற்கு டிசெம்பர் 5ஆம் திகதி மாலை 6 மணிக்கு மூன்றாவது மதிப்பீட்டுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும் இந்தக் காலப்பகுதியில் அரசாங்க விடுமுறைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர சனிக்கிழமை உள்ளிட்ட ஏனைய அனைத்து நாட்களிலும் வரவு - செலவுத்திட்ட விவாதம் நடைபெறும். (ஐ)

# திலீபன் நினைவு ஊர்தி மன்னாரை அடைந்தது!

தியாகதீபம் திலீபனின் ஊர்தி பவனி நேற்று வெள்ளிக்கிழமை மன்னார் நகரத்தை அடைந்தது.

அம்பாறையில் ஆரம்பமான இந்த ஊர்தி பவனி நேற்றைய தினம் மன்னாரை அடைந்தது. இதன்போது பெருமளவான பொதுமக்கள் அஞ்சலி செலுத்தனர்.

இதேநேரம், காற்றாலை மின் திட்டம், கனிய மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டம் நடக்கும் இடத்தை ஊர்தி அடைந்தபோது போராட்டக்காரர்களும் அஞ்சலி செலுத்தினர். (ஐ)

## திலீபன் ஆவண...

மாநகர சபையின் காணியை இம்முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் பெற்றிருந்தனர். இது தொடர்பில், எழுந்த எதிர்ப்புகளை தொடர்ந்து அந்தக் காணியை அந்தக் கட்சியினர் கைவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது(ஐ)

## கோட்டாபய...

சுமார் இரண்டரை மணிநேரம் இந்த சந்திப்பு நீண்டதாகவும் இதன்போது, அரசியல், குடும்ப விவகாரங்கள் தொடர்பில் பேசப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

சந்திப்பு நிறைவடைந்த உடனேயே கோட்டாபய ராஜபக்ஷ கொழும்புக்கு திரும்பினார் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பூசை...

சம்பவத்தில் பிரபாகரன் சாருஜன் (வயது 28) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த இளைஞர் கடந்த 14ஆம் திகதி சுகயீனமடைந்து தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்த நிலையில், ஏழாலை - மயிலங்காட்டில் வைரவர் ஆலயத்தில் பூசை செய்வதற்காக குறித்த இளைஞர் கோயிலுக்கு சென்றுள்ளார். அங்கு திடீரென சுகயீனமடைந்தார். இது தொடர்பில் கைபேசிமூலம் அவர் தந்தைக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

உறவினர்கள் அங்கு சென்றவேளை அவர் அசைவற்று காணப்பட்டார். தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு அவரை கொண்டு சென்றபோது பரிசோதித்த மருத்துவர்கள் இளைஞர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தனர்.

நுரையீரலில் ஏற்பட்ட இரத்தக் கசிவே மரணத்துக்கு காரணம் என்று உடல்கூராய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளைஞரின் மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ஐ)

## காற்று...

செய்யப்பட்ட மனு தொடர்பிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்று வெள்ளிக் கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்தது.

இதன்போது, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகளிடம் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், யாழ்ப்பாண பகுதியில் காற்று மாசுபாட்டை குறைப்பதில் சுற்றுச்சூழல் சட்டங்களின் விதிகள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்று விசாரித்தார்.

யாழ்ப்பாணத்தில் சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுக்க கட்டளை சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதிகள் அமர்வு யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் உத்தரவிட்டது. இதற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை தேவையான ஆதரவை வழங்க வேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது. (ஐ)

## ஜனாதிபதி...

அமைக்கும் திட்டங்களை உடன் நிறுத்த வேண்டும். மன்னார் மாவட்டத்தில் எந்தவோர் இடத்திலும் கனிம மணல் அகழ்வுக்கு எந்த அனுமதியும் வழங்கக் கூடாது, அமைக்கப்பட்ட ( தம்பபன்னி, நறுவிலிக்குளம் ) ஆகிய 2 காற்றாலை உயர் மின் உற்பத்தி திட்டங்களால் ஏற்பட்ட பாதிப்புகளை உடன் நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்தப் போராட்டத்தில் சுமார் 500இற்கும் மேற்பட்டவர்கள் பங்கெடுத் திருந்தனர். (ஐ)

## ஓ.எல்...

விண்ணப்பதாரர்கள் இணையவழியாகவும் சமர்ப்பிக்க வேண்டும்.

தனிப்பட்ட விண்ணப்பதாரர்கள் க.பொ.த. (சா.த.) பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது தங்கள் தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்த வேண்டும். தேசிய அடையாள அட்டை இல்லாத விண்ணப்பதாரர்கள், தங்கள் பாதுகாவலரின் (தாய் அல்லது தந்தை) தேசிய அடையாள அட்டையைப் பயன்படுத்தி விண்ணப்பங்களைப் பதிவு செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ வலைத்தளங்களான www.doenets.lk my;yJ www.onlineexa ms.gov.lk/eic இல் உள்ள வழிமுறை களைப் பின்பற்றி விண்ணப்பங்களை சரியாகச் சமர்ப்பிக்க வேண்டும் - என்றும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## வேலணை...

முன்னெடுத்தனர்.

கூட்டத்துக்கு இரு உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். சுற்றுநிருபத்தின்படியே தாம் செயல்படுவதாக இதன்போது ரஜீவன் எம்.பி. தெரிவித்தார்.

ஆனால், இதை ஏற்க உறுப்பினர்கள் மறுத்துவிட்டனர். மக்கள் பிரதிநிதிகளான தம்மை கூட்டத்துக்கு அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். இதனால், பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் இணைத் தலைவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியது. இதனால், அந்தப் பகுதியில் குழப்பமான சூழல் நிலவியது. நீண்ட வாக்குவாதத்தின் முடிவில் உறுப்பினர்களை கூட்டம் நடக்கும் மண்டபத்துக்குள் அனுமதி அளிக்கப் பட்டது. தொடர்ந்து, கூட்டத்தில் பங்கேற்க அவர்களுக்கு அழைப்பும் விடுக்கப்பட்டது.

முற்பகல் 10.15 மணிக்கு கூட்டம் ஆரம்பமானது. இந்தநிலையில், கூட்டத்தில் முக்கியஸ்தர்களுக்கான ஆசன ஒழுங்குபடுத்தலில் தவிசாளருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாததை சுட்டிக் காட்டியும் அதற்கான நடவடிக்கை பிரதேச செயலரும் இணைத் தலைவரும் தட்டிக்கழித்தனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. இதைத் தொடர்ந்தும் வாக்குவாதம் முற்றியது.

இதன்போது, கூட்டத்தில் கருத்து வெளியிட்ட தவிசாளர் அசோக்குமார்,

“தற்போதைய அரசால் வேலணை பிரதேசத்தின் தவிசாளர் பல்வேறு சந்தர்ப்பங்களில் புறக்கணிக்கப்பட்டு வரும் நிலை காணப்படுகிறது. இது அரசின் திட்டமிட்ட செயலாகவே பார்க்கப்படுகிறது. இது இந்தப் பிரதேச மக்களின் எதிர்பார்ப்புகளை தடுப்பதாக இருக்கிறது. உறுப்பினர்களுக்கான முக்கியத்துவம் மதிக்கப்பட வேண்டும். சமூக மட்ட பிரதிநிதிகளை அழைத்திருக்கும் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் எமது பிரதேசத்தின் மக்கள் பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்காமல் மட்டுப்படுத்தும் செயலை ஏற்க முடியாது”, என்றார்.

இதன்போது பொதுமகன் ஒருவர் கருத்துக்கூற முற்பட்டவேளை அவரின் ஒலிவாங்கி இணைத் தலைவரின் உத்தரவுக்கமைய பறிக்கப்பட்டது.

அதன் பின்னர், தொடர்ச்சியாக வாக்குவாதங்கள் நடைபெற்ற நிலையில் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆசனங்கள் வழங்கப்பட்டு கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கூடியளவு விரைவில் மாகாணத் தேர்தல்!

## பிரதமர் ஹரிணி தகவல்

கொழும்பு, செப். 20

**மாகாணசபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.**

மாகாணசபைத் தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படுமா என கொழும்பு ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்பட வேண்டும். எல்லை நிர்ணய பிரச்னையால்தான் இது விடயத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. ஒன்று பழைய முறைமைக்கு செல்ல வேண்டும். இல்லையேல் புதிய முறைமைக்கு செல்லவேண்டும்.

இது தொடர்பில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். இயலுமானவரை விரைவில் தேர்தலை நடத்துவதே அரசாங்கத்தின் எதிர் பார்ப்பாக உள்ளது - என்றார். (அ)



# சொத்து விவர விடயத்தில் எதையும் மறைக்கவில்லை

## கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, செப். 20

சொத்து விடயத்தில் எதையும் மறைக்கவில்லை. சகல ஆவணங்களையும் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன். சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கு மேலதிகமாக என்னிடம் சொத்துக்கள் ஏதும் காணப்படுமாயின் அவற்றை அரசுடைமையாக்கி மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். எனது சொத்துக்கள் தொடர்பில் கேள்வியெழுப்பிய அமைச்சர் வசந்த சமரசிங்க இன்று என்னை விட செல்வந்தராக உள்ளார் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது சொத்துக்கள் தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணி,ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திர கட்சி ஆகிய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து ஆராய்ந்தன. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் தலைமையில் ஊழல் ஒழிப்பு குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.விசாரணைகளுக்கு நாங்களும் முன்னிலையாகியிருந்தோம்.

சொத்துக்கள் தொடர்பில் நாங்கள் எதனையும் மறைக்கவில்லை.கிராமத்துக்கு சென்று மக்களிடம் நிதி பெற்று நாங்கள் அரசியல் செய்யவில்லை.கப்பம் பெற்றும், பொய்யுரைத்தும் அரசியல் செய்யவில்லை.

2010 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை உரிய நேரத்தில் சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விவரங்களை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்துள்ளேன்.எனது மனைவியின் சொத்துக்களுடன் என்னை தொடர்புப்படுத்தி ஒரு தரப்பினர் தற்போது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

சொத்து விவரங்களை கடந்த காலங்களில் மறைத்து வைத்தவர்கள் தான் இன்று கலக்கமடைந்துள்ளார்கள். பிறர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களுக்கு மேலதிகமாக என்னிடம் சொத்துக்கள் ஏதும் காணப்படுமாயின் அவற்றை அரசுடைமையாக்கி மக்களுக்கு பகிர்ந்தளிக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சொத்துக்கள் தொடர்பில் கேள்வியெழுப்பிய அமைச்சர் வசந்த சமரசிங்க என்னை விட செல்வந்தராக உள்ளார். ஏழ்மை நிலையில் உள்ளோம்,அணியும் ஆடைகள் கூட பிறர் வழங்குவதாக குறிப்பிட்டவர்களின் சொத்து மதிப்பு பல கோடிகளாக உள்ளது.-என்றார். (அ)



# மகிந்தவை சந்தித்த சரத் என். சில்வா!

கொழும்பு, செப். 20

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்காக முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நேற்று முன் தினம் தங்காலைக்கு சென்றார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கும் தனக்கும் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான நெருங்கிய நட்பு இருப்பதாகவும், அந்த நட்பை பிரதிபலிக்கும் விதமாக அவரைச் சந்திக்கச் சென்றதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஷவை விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறுமாறு கூறியமை நியாயம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்த தீர்மானத்தை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டைக் காப்பாற்றிய தலைவர் இவ்வாறு நடத்தப்பட்டதற்கு வருத்தப்படுவதாகவும் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா குறிப்பிட்டார். (அ)

# சஷீந்திரவுக்கு தொடர்ந்தும் மறியல்!

கொழும்பு, செப். 20

ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரிக்கும் கொழும்பு தலைமை நீதவான் அசங்க எஸ்.போதரகம நேற்று விடுமுறையில் இருந்ததால், வழக்கு அடுத்த திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேக நபர் சஷீந்திர ராஜபக்ஷவை அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதுடன், அவரது பிணை மனு மீதான உத்தரவும் அன்றைய தினம் அறிவிக்கப்பட உள்ளது.

பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்ததாக சந்தேகத்தின் பேரில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 16 ஆயிரம் பட்டதாரிகளின் உரிமைகளை மீறிய அரசு!

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 10

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்டாலும் 5 ஆண்டுகளில் பாடசாலைகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றிய 16000 பட்டதாரிகளின் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. இவர்களது பிரச்னைக்கு அரசாங்கம் துரித தீர்வினை வழங்காவிட்டால் சத்தியாக்கிரகம் அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பு-புறக்கோட்டை புகையிரத நிலைய வளாகத்தில் சத்தியாக்கிரக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கடந்த காலங்களில் இந்த பட்டதாரிகளுடன் வழக்கு தாக்கல் செய்து சட்டத்தரணி என்ற ரீதியில் அவர்களுக்காக நீதிமன்றம் சென்றிருக்கின்றேன். அப்போதைய கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்தவின் காலத்தில் சில பிரச்னைக்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. அதற்கமைய அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்ட பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான வயதெல்லை 25 இலிருந்து 45ஆக அதிகரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

அதற்கமைய நீதிமன்றமும் 45 வயது வரை நியமனத்தை வழங்குமாறு தீர்ப்பளித்தது. இந்த பட்டதாரிகளில் பெருமளவானோர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் காணப்பட்டாலும் பாடசாலைகளில் பாட நேரங்கள் வழங்கப்பட்டு சுமார் 5 ஆண்டுகளுக்கும் மேலாக கற்பித்தலில் ஈடுபட்டவர்களாகவுள்ளனர்.

இது உண்மையில் மனித உரிமை மீறலாகும். கடந்த 5 ஆண்டுகளாக ஆசிரியர்களாக பணியாற்றிய 16 000 பட்டதாரிகளுக்கு அரசாங்கம் நினைத்தால் நியமனங்களை வழங்க முடியும். காரணம் சகல மாகாணங்களிலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. எனவே மீண்டும் போட்டிப்பரீட்சையை நடத்தவேண்டிய அவசியமில்லை.

இந்த பிரச்னைக்கு தீர்வு வழங்கப்படாவிட்டால் சத்தியாக்கிரகம் அடுத்த கட்டத்துக்குச் செல்லும்-என்றார்.

# பாடசாலை நேரங்களில் கனிமங்களை டிப்பர்களில் எடுத்துச் செல்ல விதிக்கப்பட்ட தடை இடைநிறுத்தம்

கொழும்பு, செப். 20

பாடசாலை நேரங்களில் கனிமங்களை ஏற்றிச் செல்லும் டிப்பர் வாகனங்களின் இயக்கத்தை நிறுத்துவதற்காக அண்மையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை புவி சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் இடைநிறுத்தியுள்ளது.

கட்டுமானத் துறை பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக பணியகத்தின் தலைவர் சமன் ஜெயசிங்க தெரிவித்தார்.

குளியாப்பிட்டி - தும்மலசூரிய பல்லேவெல பகுதியில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற சிற்றூர்தி மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனத்துடன் கடந்த மாதம் 27 ஆம் திகதி மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் 12 மற்றும் 13 வயது பாடசாலை மாணவிகளும் சிற்றூர்தியின் சாரதியும் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், விபத்து ஏற்பட்டு சில நாட்களுக்கு பின்னர் பாடசாலை நேரங்களில் கனிமங்களை கொண்டு செல்வதைத் தடை செய்ய பணியகம் நடவடிக்கை எடுத்தது.

அதன்படி, காலை 6.30 மணி முதல் காலை 7.45 மணி வரையிலும், முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையிலும் அந்த வாகனங்களின் இயக்கத்தை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டு 10 நாட்களுக்குள், புவி சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் அந்த தீர்மானத்தை இடைநிறுத்த தீர்மானித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ... லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org